சுருக்கம்

பொதுப்பணிகள் - தமிழ்நாடு அமைச்சுப்பணி - கருணை அடிப்படையில் பணிநியமனம் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – தேனி மாவட்டம் - பணியில் இருக்கும் போது காலமான ஊராட்சி செயலர் திரு.எம்.விசயக்குமார் என்பவரின் மனைவி திருமதி.P.முத்துசொரூபராணி, இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் – பணிவரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பஅ-5) துறை

அரசாணை (3ப) எண்.40

நாள் 10.12.2021.
பிலவ, கார்த்திகை 24,
திருவள்ளுவர் ஆண்டு 2052.

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள்: 23.01.2020.
2. தேனி மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறை ந.க.எண்.9147/2020/ஊ.வ.1, நாள்: 07.01.2021.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித ந.க.எண்.27164/2021/ டி3, நாள்: 14.09.2021.

----------

ஆணை:

பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கலாம் என்பதன் அடிப்படையில், தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஊராட்சி செயலராகப்



ஊராட்சி ஒன்றியம் 7 FEB 2022 உத்தமபாளையம்

பணிபுரிந்து 04.11.2018 அன்று பணியிடைக்காலமான திரு.எம்.விசயக்குமார் என்பவரின் வாரிசுதாரரும் மனைவியுமான திருமதி.P.முத்துசொரூபராணி என்பவருக்கு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறையின்படி கருணை அடிப்படையில், தேனி மாவட்டத்தில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, அத்தனியர் 12.01.2021 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருவதால், அன்னாரின் பணியை வரன்முறை செய்து ஆணையிடும்படியும், மேலும், மறைந்த அரசு ஊழியர் பணிவரன்முறை செய்யப்பட்ட பணியாளர் என்றும், அவரது குடும்பம் வறிய நிலையில் இருந்தது என்றும், அவரது மனைவி திருமதி.P.முத்துசொரூபராணி கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 17.09.2019 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த தேதி 12.05.1984 என்றும், பணிநியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனியரின் வயது 35 என்றும், அவர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும் தெரிவித்து, மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசுக்கு முன்மொழிவு செய்து அனுப்பியுள்ளார்.

2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் முன்மொழிவு உரிய அசல் ஆவணங்களுடன் அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்படி, மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி கூர்ந்தாய்வு செய்து இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திருமதி.P.முத்துசொரூபராணி என்பவர் கருணை அடிப்படையிலான பணிநியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், தேனி மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளர் பதவியில் 12.01.2021 முற்பகல் முதல் தனியரின் பணியினை அவர் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வு பெற உரிய விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் 26.10.2021-ஆம் நாளிட்ட அலுவல் சாரா எண்.18130/ட்டி.1/2021 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அலுவல் சாரா எண்.34013/ஜி.1/2021-1, நாள்: 26.11.2021-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

K. கோபால்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை-15.
மாவட்ட ஆட்சித் தலைவர், தேனி மாவட்டம்.
திருமதி.P.முத்துசொரூபராணி, இளநிலை உதவியாளர்,
ஊரக வளர்ச்சிப் பிரிவு, தேனி மாவட்டம்.
(வழி: மாவட்ட ஆட்சித் தலைவர், தேனி மாவட்டம்.)
மாநிலக் கணக்காயர், சென்னை -18/35.
கருவூல மற்றும் கணக்குத் துறை ஆணையர், சென்னை-15
மாவட்ட கருவூல கணக்கு அலுவலர், தேனி மாவட்டம்.

<u>நகல்:</u>
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மனித வள மேலாண்மைத் (ஜி.1) துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

மாவட்ட ஆட்சியரகம், தேனி.
நாள் : 31.01.2022

மே.கு.ந.க. எண் 9147/2020/ஊவ1

நகல் உரியவருக்கு சார்வு செய்யப்படுகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர்க்காக
நேர்முக உதவியாளர் (ஊ.வ)
தேனி.

31/1/2022

**பெறுநர்**

திருமதி ப. முத்து சொரூபராணி,
ஊர்நல அலுவலர் நிலை - 2
ஊராட்சி ஒன்றியம்,
உத்தமபாளையம்.
(உரிய வழிமுறையாக)

**நகல்**

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
உத்தமபாளையம் வட்டாரம்.

---

மே.கு.ந.க.எண்: 85/2021/ப1, நாள்: -2-22

நகல் உரியவருக்கு சார்வு செய்யப்படுகிறது.

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
உத்தமபாளையம்
RE 437

10.2.22

**பெறுநர்**

திருமதி ப. முத்துசொரூபராணி,
ஊர்நல அலுவலர் நிலை - 2,
ஊராட்சி ஒன்றியம்,
உத்தமபாளையம்.